# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 11 | பாடம் : வணிகமும் கணக்கீட்டு கல்வியும் I | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

**பெயர் / சுட்டெண்** :.......................................................................................................

❖ குறிப்பு

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

❖ ***1 – 40* வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள *1, 2, 3, 4* ஆகிய விடைகளுள் சரியான விடையை தெரிவு செய்க.**

❖ **பின்வரும் சம்பவத்தை அவதானித்து *1* தொடக்கம் *5* வரையான வினாக்களுக்கு விடை தருக.**

வரையறுக்கப்பட்ட ஶ்ரீலங்கா மொபிட்டல் கம்பனி தனது வாடிக்கையாளர்கள் தங்கள் பட்டியல் கொடுப்பனவுகளை ஒன்லைனில் செலுத்துவதற்கும், இணையம் மூலம் வேறு சில தேவையான சேவைகளைப் பெறுவதற்கும் வசதிகளை வழங்கியுள்ளது. மற்றும் வணிக வங்கி தனது வாடிக்கையாளர்கள் தங்கள் பரிவர்த்தனைகளை கையடக்கத் தொலைபேசி மூலம் வங்கியின் இணையத்தளங்களுடன் இணையும் வகையில் வசதிகளை வழங்கியுள்ளது.

*01)* வரையறுக்கப்பட்ட ஶ்ரீலங்கா மொபிட்டல் கம்பனியினால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவை யாது?
*(01)* உணவு *(02)* போக்குவரத்து *(03)* தொடர்பாடல் *(04)* பொழுதுபோக்கு

*02)* வரையறுக்கப்பட்ட ஶ்ரீலங்கா மொபிட்டல் கம்பனி ஒரு.
*(01)* பொருள் உற்பத்தி வணிகமாகும். *(02)* சேவை வழங்கும் வணிகமாகும்.
*(03)* தனியுடமை வணிகமாகும். *(04)* இலாப நோக்கமற்ற வணிகமாகும்.

*03)* ஶ்ரீலங்கா மொபிட்டல் கம்பனி ஒரு வணிக அமைப்பு எனும் வகையுடன் தொடர்புடைய ஒரு பண்பு.
*(01)* வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு *(02)* சட்ட ஆளுமை உடையது.
*(03)* தொடர்ந்தியங்கும் தன்மை அற்றது. *(04)* இது ஒரு பொதுத்துறை வணிகமாகும்.

*04)* மேற்கூறப்பட்ட சம்பவத்தில் வணிக வங்கியால் வழங்கப்படும் சேவை.
*(01)* ரெலி வங்கிச் சேவை *(02)* சமூக இணையச் சேவை
*(03)* வங்கிகளுக்கிடையிலான சேவை *(04)* மொபிட்டல் வங்கிச் சேவை

*05)* ஶ்ரீலங்கா மொபிட்டல் கம்பனி தொடர்பான பிழையான கூற்றாக அமைவது.
*(01)* இவ் வணிகம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும்.
*(02)* இது தனியார் துறை வணிக அமைப்பாகும்.
*(03)* இவ் வணிகம் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.
*(04)* இவ் வணிகம் தொழில்நுட்ப சூழலுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றது.

*06)* வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் வேறுபட்ட உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்படுகின்றது. கீழே தரப்பட்டவற்றுள் மூலதனம் எனும் உற்பத்திக் காரணியை கொண்ட தொகுதியை தெரிவு செய்க.
*(01)* காசு, இயந்திரம், கட்டடம் *(02)* இயந்திரம், நிலம், உரிமையாளர்
*(03)* ஊழியர், முகாமையாளர், உரிமையாளர் *(04)* இயற்கைவளம், காசு, கட்டடம்

*07)* பின்வருவனவற்றுள் வணிகம் ஒன்றின் பலம் மற்றும் பலவீனத்தை தெரிவு செய்க.

A – முகாமையாளரின் அனுபவம்

B – வணிகத்துக்கான வரிச் சலுகைகளை வழங்குதல்.

C – நுகர்வோரின் வாழ்கைப் பாங்கு மாற்றமடைதல்.

D – சிறப்பான உற்பத்தி முறைகள் பயன்படுத்தாமை.

*(01)* A மற்றும் C *(02)* A மற்றும் D *(03)* B மற்றும் C *(04)* C மற்றும் D

08) குறுக்கு கோடிட்ட காசோலை தொடர்பான சரியான கூற்றை தெரிவு செய்க.
(01) குறிப்பிட்ட காசோலை செல்லுபடி அற்றது.
(02) வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு மாற்றப்பட வேண்டும்.
(03) குறிப்பிட்ட வங்கியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்.
(04) கை மாறாத் தகாதது.

09) சேதம் ஏற்படாத சந்தர்ப்பத்திலும் நட்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகை எது?
(01) தீ அபாயக் காப்புறுதி
(02) கள்வர் பயக் காப்புறுதி
(03) கடலபாயக் காப்புறுதி
(04) ஆயுள் காப்புறுதி

10) பொருத்தமான தொடர்பாடல் ஊடகம் ஒன்றைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(01) பெறுபவர், அனுப்புபவர், தகவல், செலவு
(02) செலவு, பெறுபவர், ஊடகம், விரைவு
(03) அனுப்புபவர், தகவல், செலவு, விரைவு
(04) விரைவு, தகவல், செலவு, நம்பகத்தன்மை

11) இழப்பீட்டு தத்துவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாத காப்புறுதி வகை எது?
(01) ஆயுள் காப்புறுதி
(02) தீக்காப்புறுதி
(03) கடலபாயக் காப்புறுதி
(04) மோட்டார் வாகன காப்புறுதி

12) போக்குவரத்தின் மூலகங்களும் அதற்கான உதாரணங்களும் X மற்றும் Y நிரல்களில் கீழே தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| i. வழி | A – எரிவாயு |
| ii. ஊடகம் | B – காற்று |
| iii. சக்தி | C – புகையிரதம் |
| iv. தரிப்பிடம் | D – துறைமுகம் |

மேலே போக்குவரத்து மூலங்களுடன் உதாரணங்களைத் தொடர்புபடுத்தும் போது பெறப்படும் மிகச் சரியான விடை.
(01) A, B, C, D
(02) B, A, C, D
(03) B, C, A, D
(04) B, C, D, A

13) பின்வருவனவற்றுள் சில்லறை வியாபாரத்தின் பண்பு எது?
(01) மீள் விற்பனைக்காக பொருட்களை கொள்வனவு செய்தல்.
(02) தெரிவு செய்யப்பட்ட சில பொருள்கள் விற்பனை செய்யப்படல்.
(03) அலகுக்கான விற்பனை விலை குறைவு.
(04) பல் வகையான பண்டங்கள் விற்பனை செய்யப்படல்.

14) பாடசாலை அதிபரினால் மாணவத் தலைவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு பாடசாலை ஒழுக்கச் செயற்பாடுகள் ஒதுக்கப்படுதல் எந்த வகையான முகாமைத்துவ தொழிற்பாடாகும்.
(01) திட்டமிடல்
(02) ஒழுங்கமைத்தல்
(03) நெறிப்படுத்தல்
(04) கட்டுப்படுத்தல்

15) பிஸ்கட்டுகளை உற்பத்தி செய்யும் வணிகம் ஒன்று அதிக கவர்ச்சிகரமான பொதியிடலை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கலவை.
(01) பொருள்
(02) விலை
(03) இடம்
(04) மேம்படுத்தல்

16) வணிகம் ஒன்றில் சொத்துக்கணக்கில் மட்டும் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கலை தெரிவு செய்க.

(01) கடன்கொடுத்தோரான டிலானுக்கு கொடுத்த காசு ரூ. 10 000
(02) உரிமையாளரின் தனிப்பட்ட பணம் ரூ.40 000
(03) ரூ. 200 000 பெறுமதியான இயந்திரம் ஒன்று அலுவலகப் பாவனைக்காக காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
(04) மீள் விற்பனைக்காக ரூ 60 000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

17) நடைமுறை சொத்தையும் நடைமுறைப் பொறுப்பையம் அதிகரிக்கக்கூடிய கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.

(01) காசு விற்பனை
(02) வங்கி கடன் பெறல்
(03) கடன் அடிப்படையில் சரகிருப்பு கொள்வனவு
(04) கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு

18) குறித்த தினத்தில் வணிகமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

சொத்து = உரிமை + பொறுப்பு
75 000 = 50 000 + 25 000
ரூ.5000 தரகு பெறப்பட்ட பின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் தாக்கம்.
சொத்து = உரிமை + பொறுப்பு

(01) 80 000 = 50 000 + 30 000
(02) 75 000 = 50 000 + 25 000
(03) 80 000 = 55 000 + 25 000
(04) 70 000 = 90 000 + 20 000

19) வணிகம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றின் செலவுப் பதிவு பின்வருமாறு,

காசுக் கணக்கு செலவு ரூ. 9 000
பெற்ற கழிவு கணக்கு செலவு ரூ. 1 000
இக் கொடுக்கல் வாங்கல் யாது?

(01) காசுக் கொள்வனவு ரூ. 10 000, குறைக்கப்பட்ட கழிவு ரூ. 1000
(02) கடன் கொள்வனவு ரூ. 10 000, குறைக்கப்பட்ட கழிவு ரூ. 1000
(03) 10% கழிவுடன் கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூ. 10 000
(04) 10 % கழிவுடன் கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ. 10 000

20) பின்வருவனவற்றுள் கடன் கொள்வனவுக்கான மூல ஆவணம் யாது?

(01) பற்றுச்சீட்டு
(02) கொள்வனவுப் பட்டியர்
(03) விற்பனைப் பட்டியர்
(04) நாட்குறிப்பு கைச்சாத்து

21) சொத்துக் கணக்கை மட்டும் தெரிவு செய்க.

(01) மூலதனக் கணக்கு, பற்றுக் கணக்கு, காசுக்கணக்கு, வங்கி கணக்கு
(02) கடன்பட்டோர் கணக்கு, சரக்கிருப்பு கணக்கு, பெற்ற வாடகை கணக்கு, காசுக்கணக்கு
(03) சரக்கிருப்பு கணக்கு, காசுக்கணக்கு, கடன்பட்டோர் கணக்கு, வங்கிக்கணக்கு
(04) வங்கி கணக்கு, வங்கிக்கடன் கணக்கு, சரக்கிருப்பு கணக்கு, காசுக்கணக்கு

❖ 22 – 23 வரையான வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

31.03.2022 இல் உள்ள குமார் வணிகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு,

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | ரூ. 200 000 |
| வங்கிக் கடன் | ரூ. 100 000 |
| கடன்பட்டோர் | ரூ. 50 000 |
| கடன் கொடுத்தோர் | ரூ. 100 000 |
| காசு | ரூ. 100 000 |

22) 31.03.2022 ல் உள்ளவாறான மேற்படி வணிகத்தின் மூலதனத்தின் அளவு யாது?
(01) ரூ.150 000 (02) ரூ. 200 000 (03) ரூ. 250 000 (04) ரூ. 100 000

23) 31.03.2022 ல் உள்ளவாறான இவ் வணிகத்தின் நடைமுறைச் சொத்தின் பெறுமானம் யாது?
(01) ரூ. 150 000 (02) ரூ. 100 000 (03) ரூ. 50 000 (04) ரூ. 200 000

24) நிரல் X கணக்கு வகைகளையம் நிரல் Y கணக்குகளுக்கான உதாரணங்களையும் குறித்துக் காட்டுகிறது.

| **நிரல் X** | **நிரல் Y** |
|---|---|
| i. சொத்துக் கணக்கு | A – விற்பனை கணக்கு |
| ii. பொறுப்பு கணக்கு | B – பற்றுகணக்கு |
| iii. உரிமை கணக்கு | C – உபகரண கணக்கு |
| iv. வருமான கணக்கு | D – கடன்கொடுத்தோர் கணக்கு |
| v. பொறுப்பு கணக்கு | E – கட்டணக்கணக்கு காப்புறுதி |

நிரல் X இற்கு பொருத்தமான நிரல் Y ஐ ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமைவது?

(01) C, D, B, A, E (02) A, D, B, C, E (03) C, B, D, A, E (04) D, C, B, A, E

25) கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற காசோலை ரூ. 60 000 இற்கான இரட்டைப் பதிவை தெரிவு செய்க.

(01) காக கணக்கு வரவு 60 000
கடன்பட்டோர் கணக்கு செலவு 60 000

(02) வங்கி கணக்கு வரவு 60 000
கடன்பட்டோர் கணக்கு செலவு 60 000

(03) வங்கி கணக்கு வரவு 60 000
காசு கணக்கு செலவு 60 000

(04) வங்கி கணக்கு வரவு 60 000
வங்கி கணக்கு செலவு 60 000

26) வியாபார கழிவு தொடர்பான சரியான கூற்றை இனங்காண்க.
(01) கடன்பட்டோரிடம் இருந்து காசு பெற்றுக்கொள்ளும் போது அனுமதிக்கப்படும் கழிவு
(02) காசுக்கு மட்டும் பொருள்களை விற்பனை செய்யும் போது பெற்றுக்கொள்ளப்படும் கழிவு
(03) வியாபார கழிவு கணக்குகளில் பதிவு செய்யப்படுவதில்லை.
(04) வியாபாரக் கழிவு கணக்குகளில் பதிவு செய்யப்படும்.

27) மாதுரி வணிகத்தின் 01.01.2022ல் உள்ள காசுக் கணக்கு மீதி ரூ. 110 000.
பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை நிறைவு செய்த பின் காசுக் கணக்கு மீதியைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

கொடுத்த சம்பளம் ரூபா 30 000
கஜனுக்கு விற்பனை ரூபா 30 000
பொருள் பற்று ரூபா 10 000
பெற்ற வாடகை ரூபா 20 000

(01) ரூ. 100 000 (02) ரூ. 80 000 (03) ரூ. 60 000 (04) ரூ. 110 000

28) கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவு வழங்கும் போது கடன் கொடுத்தோரால் குறைக்கப்படும் பெறுமானம்?
(01) காசுக் கழிவு பெறப்படும் போது
(02) காசுக் கழிவு அனுமதிக்கப்படும் போது
(03) வியாபாரக் கழிவு பெறப்படும் போது
(04) வியாபாரக் கழிவு அனுமதிக்கும் போது

❖ **பின்வரும் தகவல்களை வாசித்து 29 – 32 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - பொது நாட்குறிப்பேடு
B – விற்பனை நாளேடு
C – கொள்வனவு நாளேடு
D – காசுக்கணக்கு

29) வணிகம் ஒன்று தனது வியாபார தேவைக்காக ஜெட் கம்பனியிடமிருந்து ஒரு மோட்டார் வாகனத்தை கடனுக்கு கொள்வனவு செய்தது. இக் கொடுக்கல் வாங்கலுக்குரிய முதன்மை ஏடு?
(01) A (02) C (03) D (04) B

30) முதன்மை ஏடாகவும் பேரேடாகவும் தொழிற்படும் ஒரு கணக்கீட்டுப் புத்தகம்
(01) B (02) D (03) A (04) C

31) கடன் கொள்வனவு மற்றும் மீள் விற்பனைக்கான பொருள்களை விற்பனை செய்தல் என்பனவற்றை பதிவு செய்வதற்கு பயன்படும் கணக்கீட்டுப் புத்தகம்.
(01) A, B (02) C, D (03) C , B (04) A, D

32) D எழுத்தால் குறிப்பிடப்படும் மூல ஏட்டின் செலவுப் பக்கத்துக்கான மூல ஆவணம்.
(01) கொடுப்பனவு கைச்சாத்து
(02) பற்றுச்சீட்டு
(03) வைப்புச் சீட்டு
(04) பொது நாட்குறிப்பேடு

❖ பின்வரும் தகவலை வாசித்து 33 – 34 வரையான வினாக்களுக்கு விடை தருக.

31.05.2023 இல் இருந்தவாறு சுதன் வணிகத்தின் சில்லறைக் காசாளரிடம் இருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 2500.

பின்வருவன 2023 மே மாதத்திற்கான சில்லறை காசேட்டுப் பகுப்பாய்வு நிரல்களின் மீதிகள் ஆகும்.

காகிதாதிகள் ரூ. 2500
பிரயாணச் செலவுகள் ரூ.1800
உபசரணைச் செலவுகள் ரூ.2000
நானாவித செலவுகள் ரூ.1200

01.06.2023 ல் இருந்த சில்லறைக் காசேட்டிற்கான முற்பணப் பெறுமதியை ரூ.15000 வரை அதிகரிக்க சுதன் தீர்மானித்தார்.

33) இவ் வணிகத்தின் 2023 மே மாதத்திற்கான சில்லறைக் காசேட்டின் செலவுகளின் பெறுமதி.
(01) ரூ.2500 (02) ரூ.7500 (03) ரூ. 10000 (04) ரூ. 15000

34) 01.06.2023 இல் இருந்தவாறான சில்லறைக் காசேட்டு மீள் நிரம்பும் தொகை.
(01) ரூ.2500 (02) ரூ.50000 (03) ரூ. 12500 (04) ரூ.10000

35) சில்லறைக் காசேடு தொடர்பான பிழையான கூற்றை தெரிவு செய்க.
(01) சில்லறை செலவுகளை பதிவு செய்வதற்கு இது பயன்படும்.
(02) சில்லறை காசு கொடுப்பனவு கைச்சாத்து சில்லறை செலவுகளுக்கான மூல ஆவணமாகும்.
(03) இது வசக்கட்டு முறைமை மூலம் பேணப்படுகின்றது.
(04) செலவுகள் பகுப்பாய்வு செய்யப்படுவதில்லை.

36) 31.10.2022 சுனில் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூபா 30 000 ஆகவும் வங்கிக் கூற்று மீதி ரூபா 32 000 ஆகவும் காணப்பட்டது. இவ் வேறுபாட்டுக்கான கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.

(01) மாற்றப்படாத காசோலை ரூ.3000
(02) வசூலிக்கப்படாத காசோலை ரூ.3000
(03) நேரடி வைப்பு ரூ.3000
(04) வங்கி கட்டணம் ரூ.3000

❖ **பின்வரும் தகவலைப் பயன்படுத்தி 37, 38 ம் வினாக்களுக்கு விடை தருக.**
**சறோ வணிகத்தின் அலுவலக பாவனைக்காக செய்யப்பட்ட ரூ.15000 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.**

37) மேற்குறிப்பிட்ட விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு வழு.

(01) இரட்டிப்பு வழு
(02) மூல ஏடுகளில் பிழையாக பதித்தல்.
(03) விடுபட்ட வழு
(04) கணக்கு மாறிப்பதித்தல் வழு

38) மேற்குறிப்பிட்ட வழுவை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவை தருக?

(01) தளபாட கணக்கு வரவு ரூ.15000
கொள்வனவு கணக்கு செலவு ரூ.15000

(02) தளபாட கணக்கு வரவு ரூ.15000
காசுக் கணக்கு செலவு ரூ.15000

(03) தளபாட கணக்கு வரவு ரூ.15000
தொங்கல் கணக்கு செலவு ரூ.15000

(04) தொங்கல் கணக்கு வரவு ரூ.15000
தளபாட கணக்கு செலவு ரூ.15000

39) கடன்பட்டோரான லலிதா என்பவர் மலர் வணிகத்தின் வங்கிக் கணக்கில் ரூ.20 000 காசை வைப்புச் செய்தார். மேற்படி விடயத்தில்.

(01) வணிகத்தின் வங்கி கணக்கு மீதியை விட வங்கிக் கூற்று மீதி அதிகரித்தது.
(02) வங்கி கூற்று மீதியை விட வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி அதிகரித்தது.
(03) வணிகத்தின் வங்கி கணக்கு மீதியை விட வங்கி கூற்று மீதி குறைவடைந்தது.
(04) வணிகத்தின் வங்கி கணக்கில் அல்லது வங்கிக் கூற்றில் இந்த வேறுபாடு தாக்கத்தை ஏற்படுத்தாது.

40) பரீட்சை மீதியுடன் தொடர்புபடும் பிழையான கூற்றை தெரிவு செய்க.

(01) கணக்கில் வரவு வைக்கப்பட்ட பெறுமதி கணக்கில் செலவு வைக்கப்பட்ட பெறுமதிக்கு சமனாக காணப்படுவதை உறுதிப்படுத்தல்.
(02) இது பேரேட்டுக் கணக்காகும் சரியாக சமப்படுத்தப்படும்.
(03) வரவுப் பக்க மொத்த நிரல் செலவு பக்க மொத்த நிரல் சமனாகுவதை உறுதிப்படுத்தல்.
(04) இது பேரேட்டு கணக்கின் ஒரு சுருக்க கணக்காக கருதப்படும்.

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 11 | பாடம் : வணிகமும் கணக்கீட்டு கல்வியும் II | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :........................................................................................................

❖ குறிப்பு

❖ **முதலாம் வினா உட்பட பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

❖ **பின்வரும் சம்பவத்தை பயன்படுத்தி (1) தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

*01)* காணி சொந்தக்காரரும் பயிர்ச்செய்கையாளரும் விவசாய பாடத்தில் பட்டத்தைப் பெற்றவருமான றமேஷ் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றார். அவர் தனது உற்பத்திப் பொருட்களைப் பிரதேசத்தின் பழங்களை விற்பனை செய்யும் சந்தைகளுக்கு விநியோகிப்பதுடன் வாராந்த சந்தைகளுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்கிறார்.

சூழலியலாளரான சுதர்சன் ரமேஸ் வணிகத்தின் கழிவுப் பொருள்களான வாழை மரத்தண்டுகளையும் வாழையிலைகளையும் கொள்வனவு செய்து காய வைத்து பதனிட்டு தயாரித்து கொண்ட மூலப்பொருட்களைக் கொண்டு உணவு பொதி செய்யும் பெட்டிகளை தயாரித்து சிற்றுண்டிசாலைகளுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் விற்பனை செய்கின்றார்.

சுதர்சன் தனது வணிகத்தை 02 மே 2023 இல் பனானா லீவ்ஸ் என்ற பெயரில் பதிவு செய்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் பின்வருமாறு,

| | |
|---|---|
| காசு | *15 000* |
| கடன்பட்டோர் | *10 000* |
| கடன் கொடுநர் | *5 000* |
| உற்பத்தி உபகரணங்கள் | *50 000* |
| வங்கிக் கடன் | *25 000* |

*2023* மே மாதத்தின் போது பனானாலீவ்ஸ் வணிகத்தின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

| | | |
|---|---|---|
| வாலை இலைகள் மற்றும் வாழை மரத்தண்டுகள் கொள்வனவு | - காசுக்கு | *10 000* |
| | - கடனுக்கு | *15 000* |
| உணவு பொதி செய்யும் பெட்டிகள் விற்பனை | - காசுக்கு | *25 000* |
| | - கடனுக்கு | *50 000* |

| | |
|---|---|
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | - *30 000* |
| கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | - *10 000* |
| மின்சாரக் கட்டணம் | - *2 000* |
| தொழிற்சாலை கட்டணம் | - *4 000* |
| போக்குவரத்து செலவு | - *4 000* |
| உதவியாளர் சம்பளம் | - *5 000* |

*31* மே *2023* ம் எவ்வித இருப்பும் காணப்படவில்லை.

*01* May *2023* இலிருந்து பொலித்தின் பாவனையின் மீது அரசாங்கம் தடை விதித்ததன் விளைவால் “ பனானாலீவ்ஸ்” நிறுவனத்தின் உற்பத்தி பொருள்களுக்கு கேள்வி அதிகரித்ததன் காரணமாக அதிகரித்த கேள்வியை ஈடு செய்வதற்காக *31* May *2023* இல் ஊழியர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். மேலும் சுதர்சன் குத்தகை அடிப்படையில் காணியொன்றை பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் வாழைச் செய்கையை மேற்கொண்டு வணிகத்தை விரிவுபடுத்த தீர்மானித்தார்.

(01) ''பனானா லீவ்ஸ்'' நிறுவனம் எந்த வணிக நிறுவன வகைக்கு உரியதானதாகும்?

(02) றமேஸ் வணிகத்தின் காணத்தக்க பலம் ஒன்றைக் குறிப்பிடுக.

(03) றமேஸ், சுதர்சன் ஆகிய இருவரும் சில்லற வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

a. மேலே தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?

b. உமது விடைக்கான காரணங்களை குறிப்பிடுக.

(04) இச் சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டமிடல் கருமம், ஒழுங்கமைத்தல் கருமம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.

(05) அரசாங்கத்தினால் பொலித்தின் பாவனையைத் தடை செய்யும் சட்டத்தை அமுல்படுத்தியவை எந்த வகைச் சூழலுக்கு உரித்தானது.

(06) சம்பவத்திற் குறிப்பிடப்பட்டுள்ள ''பனானா லீவ்ஸ்'' வணிகத்தின் அகச் சூழலுக்கு உரித்தான இரு தரப்பினரைக் குறிப்பிடுக.

(07) 1 May 2023 இல் உள்ளவாறு ''பனானா லீவ்ஸ்'' வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு?

(08) ''பனான லீவ்ஸ்'' வணிகத்தினால் பேணப்படும் மூலப்பதிவேடுகள் இரண்டைப் பெயரிடுக?

(09) 2023 May மாதத்திற்கான ''பனான லீவ்ஸ்'' வணிகத்தின் காசுக் கணக்கை தயாரிப்பதன் மூலம் 31 May 2023 இல் உள்ளவாறான காசு மீதியை கணிப்பிடுக.

(10) 31 May 2023 ல் உள்ளவாறான ''பனானா லீவ்ஸ்'' வணிகத்தின் ''அ'' நடைமுறைச் சொத்தொன்றையும் ''ஆ'' நடைமுறை பொறுப்பொன்றையும் பெறுமதிகளுடன் எழுதுக.

## பகுதி I

❖ **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**02)**

(01) a. வணிகம் என்றால் என்ன?

b. வணிகம் ஒன்றின் பிரதான குறிக்கோள் யாது? (02 புள்ளிகள்)

(02) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

a. நுகர்வோரின் வேறுபட்ட விருப்பங்களைப் பூர்த்தி செய்வதன் மூலம் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றது.

b. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களினால் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள் மூலதனம் எனப்படும்.

c. எரிபொருட்களின் விலை அதிகரித்தல்.
பொருளாதார சூழலுடன் தொடர்புடையதாகும்.

d. அனைத்து சில்லறை வியாபார வணிகங்களும் சேவை வழங்கும் வணிகங்களாகும்.

(02 புள்ளிகள்)

(03) திருமதி நயனிகா இவ்வருடம் டிசம்பர் மாதம் சிங்கப்பூர் செல்வதற்கு தீர்மானித்தார். பின்னர் அவர் ராஜ்பவன் என்பவரால் நடத்தப்படும் ராஜ் டிராவலர்ஸ் என்ற முகவருடன் இணைந்து கொண்டார்.

1. திருமதி. நயனிகாவினால் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
2. ராஜ் டிராவலர்ஸ் பதிவு செய்யப்படுவதால் அடையப்படும் 02 நன்மைகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(04) ஆதித்த கரிகாலன் என்பவர் வாழை மடலைப் பயன்படுத்தி சாப்பாட்டுக் கோப்பைகளைத் தயாரிக்கின்றார். வாழை உற்பத்தி விவசாயிகளிடமிருந்து வாழை மடல்களைக் கொள்வனவு செய்கின்றார்.
இவரது உற்பத்திகளை சிற்றுண்டிச் சாலைகளுக்கு விற்பனை செய்கின்றார்.

a. ஆதித்த கரிகாலன் வணிகத்துடன் தொடர்புடைய அக்கறையுடைய தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக.

b. மேலே (அ) இல குறிப்பிட்ட அக்கறையுடைய தரப்பினர்களின் நோக்கங்களைத் தருக.

(02 புள்ளிகள்)

**03)** *(01)* a. காசோலை என்பது யாது?
b. காசோலை குறுக்கு கோடிடலின் இரு வகைகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

*(02)* பின்வரும் கூற்றுக்கள் சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

a. சில்லறை வியாபாரத்திற்கும் மொத்த வியாபாரத்திற்குமான பிரதான வேறுபாடு கொள்வனவாளரின் உள்நோக்கம் ஆகும்.

b. இழப்பீட்டுத் தத்தவம் ஆயுள் காப்புறுதிக்குப் பிரயோகிக்கப்படும்.

c. நிலையான வைப்பிலுள்ள பணத்தை கடன் அட்டைகள் மூலம் பரிமாற்றலாம்.

d. போக்குவரத்து ஊடகங்கள் செயற்படுத்தப்படும் இடம் தரிப்படம் ஆகும். *(02 புள்ளிகள்)*

*(03)* சரண்யா இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தைத்த ஆடைகள் மற்றும் சேலைகளை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்துகின்றார். இவர் இந்தியாவிலுள்ள "போர்த்தீஸ் டெக்ஸ்டைல்ஸ்" உடன் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு தைக்கப்பட்ட ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தமொன்றை செய்துள்ளார்.

a. தரப்பட்ட தரவுகளின்படி ஏற்றுமதியாளர் மற்றும் இறக்குமதியாளர் யார்?

b. மேலே கட்டளைக்குப் பொருத்தமான போக்குவரத்து முறை மற்றும் வழியைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

*(04)* சாள்ஸ் அன்ரனி தனது மோட்டார் வாகனத்திற்கு ரூ 2000 000 பெறுமதியான காப்புறுதியை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பெற்றுக்கொண்டார். ஒரு நாள் மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளாகியதில் ரூ. 500 000 அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

a. காப்புறுதி செய்வோன் மற்றும் காப்புறுத்துவோனை தனித்தனியே குறிப்பிடுக.

b. சாள்ஸ் அன்ரனி பெற்றுக்கொள்ளக்கூடிய இழப்பீட்டுத் தெகை எவ்வளவு? அதனுடன் தொடர்புடைய காப்புறுதித் தத்துவம் யாது? *(02 புள்ளிகள்)*

**04)** *(01)* a. சந்தைப்படுத்தல் என்பது யாது?
b. சந்தைப்படுத்தல் கலவையை குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

*(02)* பின்வரும் கூற்றுக்கள் சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

a. வணிகம் ஒன்று மிகவும் கவர்ச்சிகரமாகவும் இலாபகரத் தன்மையுடைய வழியிலும் திருப்தி செய்யக்கூடிய வகையில் நுகர்வோரை உள்ளடக்கியுள்ள சந்தைப் பங்கு இலக்குச் சந்தை எனப்படும்.

b. ஒழுங்குபடுத்தல் செயன்முறையில் தலைமைத்துவம் மற்றும் ஊக்கப்படுத்தல் மிக முக்கிய செயற்பாடாகும்.

c. நிலையான வைப்பிற்கான வட்டியை மாதாந்தம் அல்லது முதிர்வின் போது பெற்றுக் கொள்ளலாம்.

d. விலை என்பது வணிகர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் மிக முக்கியமான சந்தைப்படுத்தல் மாறியாகும். *(02 புள்ளிகள்)*

*(03)* இளநிலா பாற்சாலை இனிப்பான காய்ச்சிய பாலை உற்பத்தி செய்யும் வணிகமாகும். இது கவர்ச்சிகரமான பொதிகளில் வழங்குவதுடன் புதுவருட பண்டிகை காலத்தில் சந்தைகளில் 5 % கழிவு வழங்கப்படுகிறது. சந்தையில் இடம்பிடிப்பதற்காக சில தொலைக்காட்சி விளம்பரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

a. மேலே தரவுகளின் அடிப்படையில் இரு முகாமைத்துவக் கருமங்களுக்கு உதாரணம் தருக.

b. இதனடிப்படையில் சந்தைப்படுத்தல் மாறிகள் இரண்டிற்கு உதாரணம் தருக. *(02 புள்ளிகள்)*

(04) குடிநீர் போத்தல் உற்பத்தி வணிகத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு,

i. இயந்திர இயக்குனர்களை நியமித்தல்.

ii. இயந்திர இயக்குனர்களுக்கான தகவல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

iii. குடிநீர்ப் போத்தலின் வடிவமைப்பைத் தீர்மானித்தல்.

iv. குடிநீர்ப் போத்தல்களின் தரப் பரிசீலனை செய்தல்.

மேலேயுள்ள செயற்பாடுகள் எம் முகாமைத்துவ கருமம் என்பதனைத் தருக. (02 புள்ளிகள்)

## பகுதி II

❖ **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

***05)***

(01) i. சொத்து என்றால் என்ன?

ii. உரிமையாண்மைக் கணக்குகள் தொடர்பில் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எழுதுக.

(02 புள்ளிகள்)

(02) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப் பதிவை எழுதுக.

i. உரிமையாளர் தனது சொந்த தேவைக்காக ரூபா 50 000 காசாக பற்றியுள்ளார்.

ii. மின்சாரக் கட்டணம் ரூ. 10 000 ரூபாவுக்கு காசோலை வழங்கப்பட்டது. (02) புள்ளிகள்)

(03) வான்மதி வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்துடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

i. ரூபா 100 000 வங்கிக்கடன் பெறப்பட்டது.

ii. உரிமையாளர் தனது சொந்த தேவைக்காக எடுத்த காசு 6 000 ரூபா.

iii. தளபாடம் ரூ. 50 000 கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

iv. ரூபா 60 000 பெறுமதியிலான பண்டங்கள் ரூ. 20 000 இலாபத்துடன் விற்கப்பட்டது.

v.

மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை கீழே தரப்பட்ட அட்டவணையில் ஏற்படுத்தும் தாக்கத்தை பெறுமதியுடன் குறித்துக் காட்டுக.

| கொ / வா இல | சொத்துக்கள் = | | | உரிமையாண்மை | + பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | தளபாடம் | சரக்கிருப்பு | காசு | மூலதனம் | கடன் கொடுநர் |
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |

(04 புள்ளிகள்)

(04) ஆதிரன் வணிகத்தின் 2023 ஜனவரி மாதம் இடம்பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன. 01.01.2023 இல் காசு மீதி ரூபா 40 000.

| திகதி | பற்றுச்சீட்டு இல | கைச்சாத்து இல | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 03.01.2023 | 01 | | வங்கிக்கடன் பெற்றது. | 50 000 |
| 05.01.2023 | | 01 | காசுக் கொள்வனவு | 70 000 |
| 10.01.2023 | 02 | | காசு விற்பனை | 150 000 |
| 15.01.2023 | | 02 | செலுத்திய மின் கட்டணம் | 10 000 |
| 30.01.2023 | 03 | | | |
| | | | கடன்பட்டோர் தந்த காசு | 100 000 |

காசுக் கணக்கினை தயாரித்து 31.01.2023 இல் காசு மீதியைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

**06)**

(01) அ) வணிகமொன்றில் பயன்படுத்தப்படும் முதன்மை ஏடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
ஆ) காசுக் கணக்கின் இரட்டைத் தொழிற்பாட்டைத் தருக. (02 புள்ளிகள்)

(02) ரட்ணம் வணிகத்தின் 2023 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற சில்லறைச் செலவு தொடர்பான தகவல்கள் வருமாறு,

| திகதி | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| 01.03.2023 | பிரதான காசாளரால் மீள் நிரப்பப்பட்டது | 5 000 |
| 03.03.2023 | எழுது கருவி கொள்வனவு | 300 |
| 08.03.2023 | போக்குவரத்து | 1 500 |
| 09.03.2023 | உபசரணைச் செலவு | 300 |
| 10.03.2023 | வாடகை | 500 |
| 14.03.2023 | கூலிகள் | 400 |
| 18.03.2023 | பேனா பென்சில் | 200 |
| 20.03.2023 | உபசரணைச் செலவு | 400 |
| 24.03.2023 | சுத்திகரிப்புச் செலவு | 600 |
| 01.04.2023 | சில்லறைக்காக மீள் நிரப்பப்பட்டது | |

பின்வரும் பகுப்பாய்வு நிரல்களைக் கொண்ட சில்லறைக் காசேட்டில் பதிவு செய்க.
(எழுதுகருவி, உபசரணைச் செலவு, போக்குவரத்துச் செலவு, நானாவித செலவு, பேரேடு)
(05 புள்ளிகள்)

(03) மணிமாறன் வணிகத்தின் ஜூன் மாதம் 2023 க்கு விற்பனை தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| திகதி | பட்டியல் இல | கடன்பட்டோர் | தேறிய பெறுமதி |
|---|---|---|---|
| 05.06.2023 | 010 | கவிநயா | 15 000 |
| 08.06.2023 | 011 | அருணன் | 20 000 |
| 10.06.2023 | 012 | குமணன் | 14 000 |
| 20.06.2023 | 013 | அபிநயா | 11 000 |

விற்பனை நாளேட்டினை தயாரிப்பதுடன் பொருத்தமான பிற கணக்குகளையும் தயாரிக்கக.
(05 புள்ளிகள்)

**07)**

(01) a. மறுக்கப்பட்ட காசோலை என்றால் என்ன?
b. கடன் கொடுத்தோருக்கு ரூ. 50 000 பெறுமதியான காசோலை வழங்கப்படுதலுக்கான இரட்டைப் பதிவை எழுதுக. (02 புள்ளிகள்)

(02) சண்முகன் வணிகத்தின் 31.01.2023 இல் வங்கி மீதி ரூபா 50 000 ஐ காட்டியது. இது வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை. வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு,

1. வைப்பிலிட்ட வசூலிக்கப்படாத காசோலை ரூபா 15 000
2. நேரடி வைப்பு ரூபா 5 000
3. வழங்கப்பட்டு இன்னமும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 10 000
4. நிலையான கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூ. 2000

வேண்டப்படுவது,

1. சீராக்கிய வங்கிக் கணக்கு.
2. 31.01.2023 இல் வங்கி இணக்க கூற்று. (04 புள்ளிகள்)

(03) துவாரகா வணிகத்தின் பரீட்சை மீதியின் வரவுப் பக்கம் ரூபா 28000 ஆல் செலவுப் பக்கத்தை விட குறைவாகக் காணப்பட்டது. கணக்காய்வில் பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டது.

1. கொள்வனவு பட்டியல் ஒன்றின் பெறுமதி ரூபா 5000 முற்றாக ஏடுகளில் தவறவிடப்பட்டது.
2. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ. 12000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.
3. போக்குவரத்து செலவு ரூபா 16 000 போக்குவரத்து செலவுக் கணக்கில் பதியப்படவில்லை.
4. சிவாவுக்கு கொடுத்த காசு ரூபா 9 000 தவறுதலாக ராதா கணக்கில் வரவில் பதியப்பட்டது.

வேண்டப்படுவது,

மேற்குறிப்பிட்ட வழுக்கள்களைத் திருத்துவதற்கான,

1. பொது நாட்குறிப்பேடு பதிவுகள்
2. தொங்கல் க/கு (06 புள்ளிகள்)